ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2400 - 2024 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2024.08.30
*2400 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 2056 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2055 - B 082602 - 403 (2024/08)

# அரசாங்க அறிவித்தல்

**சிவில் விமான சேவைகள் அமைச்சு**

சிவில் விமான சேவை அதிகார சபை

**1955 இன் 196 வான்கலமோட்டல் ஒழுங்குமுறையின் கீழ் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் அறிவித்தல்.**

தனியார் செயற்பாட்டு (Private Operations) நடவடிக்கைகள், விமானத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுகள் (Aerial Work) மற்றும் உள்நாட்டு கூலி விமானப் போக்குவரத்து (Domestic Charter Operations) செயற்பாட்டு நடவடிக்கைகளான பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் விமானப் சேவைகளை முன்னெடுப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் உட்பட நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டுச் சான்றிதழ் மற்றும் விமானக் கம்பனிக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு சர்வதேச விமான நிலையம், இரத்மலானை இல் உள்ள வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியினால் 2024, யூலை மாதம் 03 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2024, யூலை மாதம் 02 ஆந் திகதி கொண்ட விண்ணப்பப்படிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன். விண்ணப்பப்படிவத்திற்கு அமைய வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.

திரு. டி. ஏ. சீ. வி. தம்புகல
திருமதி எஸ். எம். சாந்தனி

இக்கம்பனியின் உத்தேச விமானப் போக்குவரத்து செயற்பாடுகள் தொடர்பாக பிரதான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு திரு. ஆர். கே. இசுரு அர்ஜித அவர்கள் வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை கட்டுநாயக்க, மினுவன்கொட வீதி, இலக்கம் 152/1, கொண்ட சிவில் விமானப் சேவை அதிகார சபையின் கீழ் (அடித்தளம்) மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொது மக்களுக்கு இதனை பார்வையிட முடியும். உத்தேச செயற்பாடுகளுக்காக தேவையான விமானப் செயற்பாட்டுச் சான்றிதழ் (Air Operator Certificate) உட்பட ஏனைய உரிய அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவை சட்டம் விமான போக்குவரத்து சேவையைப் போன்று உரிய தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதனுடன் இணைந்த உள்நாட்டு தேவைகளுக்கு அமைய பாதுகாப்புமிக்க வினைதிறனுடன் கூடிய விமான போக்குவரத்து சேவைகளை நடாத்துவதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளை கூட்டிணைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசோதனைகளை மேற்கொண்டு இவ் விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் 2024, ஒற்றோபர் 09 ஆந் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

1955 இன் 196 வான்கலமோட்டல் ஒழுங்குமுறையின் கீழ் மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்துக்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணங்களை அடிப்படையாக கொண்ட விடயங்களை விமானப் போக்குவரத்து கோவைக்கு அமைய எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியும். உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளிப்பாடுகளின் உண்மை தன்மையை எழுத்து மூல காட்சிகளுடன் சமர்பிக்கப்பட வேண்டும். இவ்வாறான விஞ்ஞாபனத்தை என்னிடம் சமர்பிக்கும் வேளையில் அவரினால் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்கு கிடைக்க செய்ய வேண்டியதுடன், அவ்வாறு அனுப்பப்பட்டதாக சான்றிதழை உரிய விஞ்ஞாபனத்துடன் இணைக்க வேண்டும்.

எயர் வைஸ் மார்ஷல் சாகர கொடகடெனிய (ஓய்வுபெற்ற),
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை,
பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை,
இலக்கம் 152/1, மினுவங்கொட வீதி,
கட்டுநாயக்க.
2024, ஓகத்து 30.

08-239

## கல்வில புராண ரஜமஹா விகாரையின் பிரை மஹா ஊர்வல ஒழுங்குவிதிகள்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வடக்கு மாகம்புர பிரதேசத்தில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 121 பஹல பெரகம கிராம சேவகர் பிரிவின் கல்வில புராண ரஜமஹா விகாரையின் பிரை மஹா ஊர்வல விழா ஒழுங்குவிதிகளாக ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் ஜீ. சீ. ஆர். விஜயவர்தன ஆகிய நான் யாத்திரை வழிபாட்டு சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதியின் அனுமதிக்கப்பட்ட காலமாக அறிவிக்கின்றேன்.

2024 ஆம் ஆண்டின் பிரை மஹா ஊர்வல விழா 2024.09.16 ஆந் திகதி முதல் 2024.09.28 ஆந் திகதி வரை நடைபெறும்.

ஜீ. சீ. ஆர். விஜயவர்தன,
பிரதேச செயலாளர்,
ஹம்பாந்தோட்டை.

08-232